# தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு

# ஆண்டறிக்கை 2015

**இல. 31/9, 31/10, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு- 08**
**தொலைபேசி: 011-2680711/2680712**
**தொலைநகல்: 011 - 2680713**
**மின்னஞ்சல்: nastecsl@yahoo.com**
**இணையத்தளம்: www.nastec.lk**

# தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு

# ஆண்டறிக்கை 2015

**இல. 31/9, 31/10, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு- 08**
**தொலைபேசி: 011-2680711/2680712**
**தொலைநகல்: 011 - 2680713**
**மின்னஞ்சல்: nastecsl@yahoo.com**
**இணையத்தளம்: www.nastec.lk**

# எம்மைப்பற்றி

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு 1994ம் ஆண்டின் 11ம் இலக்க தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது 1998ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொழிற்பட ஆரம்பித்தது. இது 1998 மார்கழி 6 ஆம் திகதி உத்தியோகபூர்வ ரீதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1999 தை மாதம் முதல் முழுமையாக இயங்குகின்ற ஒரு நிறுவனமாக மாறியது.

இலங்கை அரசாங்கத்துக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கல் மற்றும் கொள்கை வகுத்தலுக்கான உயர் நிறுவனமாக நியமிக்கப்பட்டது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களை ஆணைக்குழு உள்ளடக்கியுள்ளது.

# ஆண்டறிக்கை 2015

## தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுச் (NASTEC) செயலகத்தின் வெளியீடு

தொகுப்பு: கலாநிதி. முடித லியனகெதற

ஆக்கம்: செல்வி சயூமி விஜேசிங்க

# உள்ளடக்கம்


எமது செயற்பணியும் தொலை நோக்கும்..........09

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்..........11

நிறுவனத்தின் விபரத்திரட்டு..........14

நிறுவனத்தின் கட்டமைப்பு..........15

விஞ்ஞான தொழில்நுட்ப மீளாய்வு..........16

நாட்டின் S&T பற்றிய நிலையின் மீளாய்வு.......... 16

S&T நிறுவனங்களின் மீளாய்வு..........16

சர்வதேச உறவுகள்..........19

NAM S&T நிலையத்தினால் வழங்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்கள்..........19

வேறு NASTEC இன் செயற்பாடுகள்..........20

இளைய விஞ்ஞானிகள் மன்றம்..........20

எமது உத்தியோகத்தர்கள்..........27

உத்தியோகத்தர்கள் செய்திகள்..........29

உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய நிகழ்வுகள்..........29

நன்றி தெரிவித்தல்..........30

நிதிக் கூற்று..........31

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை..........34

# எமது தொலைநோக்கும் செயற்பணியும்

## எமது தொலைநோக்கு

"...இலங்கையின் மக்களின் சுபீட்சம் மற்றும் சௌபாக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு விஞ்ஞான, தொழில்நுட்பத்தின் ஆற்றல் மற்றும் பிரயோகம் பற்றி அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்கும் உயர் நிறுவனமாகத் திகழ்தல்... "

## எமது செயற்பணி

"...விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் உயர் திறன்களை தேசிய ரீதியில் கட்டியெழுப்புவதற்கான கொள்கைகள், உபாயங்கள் மற்றும் திட்டங்களை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தலும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை நிலையான அபிவிருத்திக்காக பிரயோகித்தலும்... "

# ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

## பேராசிரியர்.டீ.ஏ.தந்திரிகொட

**தலைவர்**



ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் பீடத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர்(2004 இலிருந்து இன்றுவரை), ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் பீடத்தின் பேராசிரியர்(1996-2004), பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தின் தொழில்நுட்ப ஆலோசகர(2012), உயர்கல்வி அமைச்சின் கொள்கை மற்றும் மூலோபாய பிரிவின் முதன்மை ஆலோசகர்(2007-2008), இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் பொதுத்தலைவர், எடின்பர்க் பல்கலைக்கமகக்கின் வருகை அாாய்ச்சி நிபணர்(1993-1994).

## பேராசிரியர்.ஆர்.ரீ.குமாரணதுங்க



ருகுணு பல்கலைக் கழகத்தின் கடற்றொழில் உயிரியல் பிரிவின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் (2007 இலிருந்து இன்றுவரை) கடற்றொழில் மற்றும் சமுத்திரவியல், தொழில்நுட்ப பீடத்தின் ஸ்தாபகர்/பீடாதிபதி (2005-2008), ருகுணு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் சமுத்திர உயிரியல் பிரிவின் தலைவர்(1990-2005).

இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தில்(SLAAS) வகித்துள்ள பதவிகள்

- பொதுத் தலைவர் (2013),
- ஆளும் சபை உறுப்பினர் (2003, 2004, 2006, 2007, 2010, 2011)
- பிரிவு D (இயற்கை விஞ்ஞானம்) – தலைவர் (2003), உப தலைவர்(2002), செயலாளர் (2000) குழு உறுப்பினர் (1998 - 2004).
- CPS – தலைவர் (2005), குழு உறுப்பினர் (2003-2008, 2011)
- விஞ்ஞானக் கல்வி குழு - தலைவர் (2011)

## பேராசிரியர்.ஏ.ஏ.பீ.எஸ்.மனம்பேரி

களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் அணு மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர், டேர்டன்ஸ் வைத்தியசாலை அணு உயிரியலாளர்(2007 இலிருந்து இன்றுவரை), ஆலோசகர், தொழில்நுட்ப மதிப்பீட்டாளர், SLAB(2008 இலிருந்து இன்றுவரை), களனிப் பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் உதவியாளர்(1997-1998), கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி உதவியாளர்(1998)



## கலாநிதி.எஸ்.எஸ்.நமசிவாயம்



மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் சிரேஷ்டவிரிவுரையாளர், இந்திய பட்டய நிதிப் பகுப்பாளர் நிறுவனத்தின் (ICFAI) எடியுகேஷன் லங்காவின் பீடாதிபதி(2008-2009), நவீன தொழில்நுட்பத்துக்கான ஆதர்.சீ.கிளார்க் நிறுவகத்தின் பணிப்பாளர்/CEO(2002-2007), கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் மின் தொழில்நுட்பவியல் பிரிவின் தலைவர்(1995-2000)

**திரு.பி.டீ.பெர்னான்டோ** (வைகாசி 2013 இலிருந்து தை 2015 வரை)



கைத்தொழில், வாணிப அமைச்சின் வாணிப பணிப்பாளர் நாயகம்(2012-2013); இலங்கை கொன்சியூலர் நாயகம், அவுஸ்ரேலியா(2009), ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் வர்த்தக மேம்பாட்டுப் பணிப்பாளர் - தலைவர்(2007-2009); இலங்கை கொன்சியூலர் நாயகம், கராய்ச்சி(2002-2004); வர்த்தக மற்றும் வாணிப அமைச்சின் பிரதி வாணிபப் பணிப்பாளர்(2001); ஐரோப்பிய சங்கத்தின் நிரந்தரப் பிரதிநிதி, புருசெல்ஸ்(1998-2001); ஜப்பான் இலங்கைத்தூதரகத்தின் தன்மைச் செயலாளர்(வாணிப மற்றும் பொருளாதார) (1987-1989); பாகிஸ்தானில் இலங்கை வர்த்தக ஆணையாளர் (1982-1985); வர்த்தக, கப்பற்றுறை அமைச்சின் உதவி வாணிபப் பணிப்பாளர்(1979-1982); ஒருங்கிணைந்த சுங்க உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் உதவிச்செயலாளர்

**கலாநிதி.பி.எம்.எஸ்.பட்டகொட** (வைகாசி, 2013 - தை 2015 வரை)




நிதி, திட்டமிடல் அமைச்சின், பொதுத் திறைசேரியில் பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் (2008 முதல் இன்றுவரை), பொதுத்திறைசேரியில் கருத்திட்ட முகாமைத்துவ பணியகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர், இலங்கை காபன் நிதியத்தின் பிரதம நிறைவேற்ற அதிகாரி (2008 முதல் இன்றுவரை), தொழிற்பாட்டு மற்றும் மீளாய்வு பணிப்பாளர் நாயகம், பொதுத் திறைசேரி (2007-2008), உலக வங்கியின் இலங்கை காபன் நிதி உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் குழுத்தலைவர்(2004-2007), சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சின் காலநிலை மாற்றம் மற்றும் உலக அலுவல்கள் பற்றிய பணிப்பாளர் (1998-2004),இலங்கையின் ஜனாதிபதி அவர்களின் உதவிச்செயலாளர்(1992-1994), பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு (1987-1989), பொது நிர்வாக அமைச்சில் பொது நிர்வாக உதவிப்பணிப்பாளர்(1986-1987)

**கலாநிதி.ஜே.வத்தவிதானஹே**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் விலங்கையில் சிரேஷ்ட விரிவுரையாளர் (1998 முதல் இன்றுவரை), தேசிய விஞ்ஞான மன்றத்தில் விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் குழுவின் தலைவர்(2010), தேசிய விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான நிலைய தொழில்நுட்பக் குழுவின் அங்கத்தவர்(2010), இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் டீ பிரிவின்(உயிரியல் மற்றும் புவியியல்) தலைவர்(2006), தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகள் அமைச்சின் புடவைகள் உற்பத்தி வர்த்தகப்பிரிவின் சம்பளக் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கத்தவர்(2005), தேசிய கடற்றொழில் மற்றும் கப்பற்துறை பொறியியல் நிறுவகத்தின் (சமுத்திரப் பல்கலைக்கழகம்) நிருவாக சபை அங்கத்தவர்(2004), தேசிய விஞ்ஞான மன்றத்தில் விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் குழுவின் அங்கத்துவர்(2003), தேசிய விஞ்ஞான மன்றத்தில் விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் குழுவின் தலைவர்(2002)



**பேராசிரியர்.நாரத வர்ணசூரிய** (ஆவணி 2015 இலிருந்து)



கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் குழந்தை மருத்துவவியலின் ஓய்வுபெற்ற பேராசிரியர் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் குழந்தை மருத்துவவியலின் சிரேஷ்ட பேராசிரியர்; ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர(ஆடி 2005- புரட்டாதி 2008), குழந்தை மருத்துவவியலின் சிரேஷ்ட பேராசிரியர்(வைகாசி 2005 – கார்த்திகை 2009); ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி (ஆடி 2004- ஆடி 2005), ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் குழந்தை மருத்துவவியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர்(வைகாசி 1997- வைகாசி 2005), ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் குழந்தை மருத்துவவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் தலைவர்(சித்திரை 1997- சித்திரை 2005), இலங்கை துணைவேந்தர்கள், குழந்தை மருத்துவவியலின் ஆலோசகர், சவுதி அரேபியாவின் ஆயுதப்படை வைத்தியசாலையின முதுகலைப் பட்டப்படிப்பின் ஆசிரியர்(1989-1996)

**கலாநிதி.எ.எம்.முபாரக்** (ஆவணி 2015 இலிருந்து)



கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின்(முன்னர் CISIR) முன்னாள் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி(2002-2012), விஞ்ஞான முதுகலைப்பட்டபடிப்பு நிறுவகத்தின் கொழும்பு பல்கலைக்கழக சபை, தேசிய பொறியியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், இலங்கை தராதர அங்கீகார சபை, மற்றும் இரசாயன ஆயத மாநாட்டின் உறுப்பினர்; நபர், சொத்து மற்றும் கைத்தொழில்சபையின் உறுப்பினர்(REPPIA); தேசிய விஞ்ஞான கல்விக்கழகத்தின் உபதலைவர்; இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின்(SLAAS) முன்னாள் பொதுத்தலைவர்; இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தின் முன்னாள் தலைவர், இலங்கை இரசாயன தொழிற்சங்கம், EB கிறீஷி & கோ PLC, டார்லி பற்லர் PLC, முல்லர் & பிலிப்ஸ்(இலங்கை) PLC மற்றும் லக்ஷபான பற்றரீஸ் PLC இன் சுயாதீனமான நிர்வாகமல்லாத பணிப்பாளர்

# நிறுவனத்தின் விபரத்திரட்டு

- தலைவர் ஆணைக்குழுவுக்கு தலைமை வகிக்கின்றார்
- பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராவார்.
- கொள்கைகள், திட்ட அறிக்கைகள் மற்றும் ஏனைய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ஆவணங்களைத் தயாரிக்கின்ற ஆய்வுக் குழுக்கள் மற்றும் ஆலோசனைச் சபைகளுக்கான வசதியேற்பாடுகளையும் முகாமைத்துவத்தையும் சிரேஷ்ட விஞ்ஞானிகள் மேற்கொள்கின்றனர்.
- நிறைவேற்றுச் செயலாளர் ஆணைக்குழுவின் செயலாளராவார் அத்துடன் அலுவலக முகாமையாளராகவும் செயலாற்றுகின்றார்.
- பிரதிப் பணிப்பாளர் , நிதி மற்றும் நிர்வாகம் சகல நிதி விடயங்களினதும் முகாமைத்துவத்தை மேற்கொள்கின்றார்.
- ஆணைக்குழுவின் தேவைப்பாட்டைப்பொறுத்து விசேட கருமங்கள் மற்றும் ஒப்படைகளுக்காக ஆலோசகர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றனர்.

# நிறுவனக் கட்டமைப்பு




*தொடர்ச்சியான கோடுகள் நிரந்தர நியமனங்களை குறிக்கிறது.*
*தொடர்ச்சியற்ற கோடுகள் ஒதுக்கப்பட்ட நியமனங்களை குறிக்கிறது.*

# விஞ்ஞான, தொழில்நுட்ப மீளாய்வுகள்

## *நாட்டின் S&T இனுடைய நிலையின் வருடாந்த தேசிய மீளாய்வு*

இலங்கையின் விஞ்ஞான தொழில்நுட்ப செயற்பாடுகளை மீளாய்வு செய்து தொடர்ச்சியான வருடங்களில் அரசாங்கத்திற்கு வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு NASTEC ஐ வேண்டப்பட்டுள்ளது.

இம்மீளாய்வானது S&T இல் மனிதவள அபிவிருத்திக்காக பொதுச்செலவீனத்தின் திறன், S&T நிறுவனங்களின் செயல்திறன், பொது மற்றும் தனியார் பகுதிகளின் தொழில்நுட்ப பயன்யடுத்தல் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையானது தேசியஅளவில் கொள்கை உருவாக்கலிற்கு பெறுமதியான தகவல்களை வழங்குகின்றது.

NASTEc ஆனது மேற்குறிப்பிட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக 2014 தொடக்க காலப்பகுதியில் தகவலை திரட்டுவதற்கான ஆய்வை மேற்கொள்ளத் தொடங்கியது. இதற்காக 2013-2014 தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்காக வினாக்கொத்து தயாரிக்கப்பட்டது.

29 அரச S&T நிறுவனங்களில் ஒவ்வொன்றிலுமிருந்து தொடர்பான அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார். பின்னர், NASTEC இனால் தொடர்பான இவ் அலுவலர்களிற்கு கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. அதில் வினாக்கொத்து தொடர்பாக விபரமாக கலந்துரையாடப்பட்டது. 2014 இடைப்பகுதியில் NASTEC, 28 S&T நிறுவனங்களிடமிருந்து நிரப்பப்பட்ட வினாக்கொத்தைப் பெற்றுக்கொண்டது. அத்தரவுகள் தரவுத்தளத்தில் செலுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. S&T நிலை அறிக்கை 2013 இன் வரைவு 2015 இன் இறுதியில் தயாரிக்கப்பட்டது.

## *S&T* நிறுவனங்களின் மீளாய்வு

NASTEC ஆனது 1994 இன் இல 11, S&T அபிவிருத்திச்சட்டத்தின் கீழ் S&T நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

தேசிய ஆராய்ச்சி சபை (NRC), தேசிய அங்கீகாரசபை (SLAB) அணுச்சக்தி அதிகாரசபை (AEA), இலங்கை கட்டளைகள் நிறுவகம் (SLSI) ஆகிய நிறுவனங்களை 2015 இல் மீளாய்வு செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

### **தேசிய கட்டளைகள் நிறுவகம் (SLSI)**

இதன் சுயமதிப்பீட்டு அறிக்கையை 2013 ஐப்பசியில் பெற்றுக்கொண்டது. அத்துடன் NASTEC, SLSI இன் இணக்கத்துடன் மீளாய்வுக் குழுவை நியமித்தது.

முதலாவது மீளாய்வுக்குழுக் கூட்டம் மீளாய்வை திட்டமிடுவதற்காக NASTEC இல் 17 சித்திரை 2014 இல் இடம்பெற்றது. இத்திட்டமானது SLSI இன் முகாமைத்துவ பிரிவுடன் 30 சித்திரையில் முதலாவதாக இடம்பெற்ற கூட்டத்தில் மேலும் விருத்திசெய்யப்பட்டது.

SLSI இற்கான பல மீளாய்வு விஜயங்களின் பின், மீளாய்வுக்குழு SLSI இன் பங்குதாரர்களுடன் ஆனி மற்றும் ஆடியில், SLSI ஆல் வழங்கப்படும் சேவை தொடர்பான கருத்துக்களைப் பெறுவதற்காக கூட்டம் நடாத்தப்பட்டது.

மீளாய்வு அறிக்கையின் முதலாவது வரைபு 2014 மார்கழியில் அவர்களது கருத்திற்காக SLSI இற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இறுதி அறிக்கையானது SLSI இன் கருத்துக்களைப் பெற்றபிறகு வைகாசி 2015 இல் நிறைவு செய்யப்பட்டது.

தங்களுடைய ஒத்துழைப்புத்திட்டத்தினை தயாரிக்கின்ற போது SLSI ஆனது நேரடி பங்குதாரர்களிற்கும், இடைநிலைமட்ட ஊழியர்களிற்கும் ஆலோசனை வழங்குவதற்கு போதுமான கவனம் செலுத்தவில்லை என்பதை மீளாய்வுக் குழு சுட்டிக்காட்டுகின்றது. இது ஒரு மேல்-கீழ் அணுகுமுறை மீது தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கீழ்மட்டத்தில் உள்ள ஊழியர்களிற்கு நிறுவனத்தின் இலக்குகள் பற்றிய

விழிப்புணர்வு இல்லை. செயற்றிட்டங்களை திட்டமிடும் போது தேசிய அபிவிருத்தி இலக்குகள் போதுமான அளவிற்கு கருத்தில் எடுக்கப்படவில்லை. அத்துடன் இலக்குகளானது கடந்த ஆண்டு வெளியீடுகளை மட்டும் அடிப்படையாக கொண்டுள்ளது. இந்தக்குழு அங்கு செயற்திட்டங்களின் முறையான கண்காணிப்பு இல்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது. ஆட்சேர்ப்பில் உள்ள தாமதம், முறையான வருடாந்த பயிற்சியின்மை, அபிவிருத்தித் திட்டம் மற்றும் பதவி உயர்விலுள்ள பல பிரச்சினைகள் ஆகியன சம்மந்தமாக மீளாய்வுக்குழு வெளிப்படுத்தியதிலிருந்து மனிதவள முகாமைத்துவத்தில் கூடிய முன்னேற்றம் தேவை.

**<u>தேசிய ஆராய்ச்சி சபை (NRC)</u>**

NRC இன் மீளாய்விற்கான 1[வது] சுற்று 2014 இல் ஆரம்பித்து 2015 ஆரம்பப்பகுதியில் முடிவுற்றது. மீளாய்வுக்குழு கீழுள்ள அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது

- *பேராசிரியர்.எம்.ஜே.எஸ். விஜேயரத்ன, விஞ்ஞான பீடம், களனிப்பல்கலைக்கழகம் (மீளாய்வுக்குழுத் தலைவர்)*
- *பேராசிரியர்.கமல் ஐ டீன், மருத்துவபீடம். களனிப்பல்கலைக்கழகம்*
- *பேராசிரியர்.கமல்.பி.குணஹெரத், இயற்கை விஞ்ஞான பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*
- *பேராசிரியர்.டபிள்யு.ஜி.டி.தர்மரத்ன, விஞ்ஞான பீடம், றுகுண பல்கலைக்கழகம்*

NRC இனுடைய சுயமதிப்பீட்டு அறிக்கை NASTEC இற்கு ஆவணி 2014 இல் கிடைக்கப்பெற்றது. மீளாய்வுக்குழுவின் முதலாவது சந்திப்பு 18ம் திகதி புரட்டாதி NASTEC இல் இடம் பெற்றது. இக்குழுவானது 02 சந்திப்புக்களை NRC இற்கு மேற்கொண்டது. அத்துடன் பங்குதாரர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர்

மீளாய்வு அறிக்கையானது NRC இன் கருத்துக்களையும் சேர்த்து மாசி 2015 இல் முடிக்கப்பட்டது. இந்த மீளாய்வு கீழுள்ள கண்டுபிடிப்பகளை உள்ளடக்கியுள்ளது.

NRC ஆனது தொழில்நுட்ப அபிவிருத்தி, ஆராய்ச்சி வெளியிடல், S&T சமூகத்திற்கும் தேவையான பயிற்சிகளை உத்தியோகத்தர்களிற்கு வழங்குதல் ஆகியவற்றில் கூடுதலான பங்களிப்பு செய்தது. தோழில்நுட்பத்தினை தொழில்துறைக்காக மாற்றுதலானது தனியார் பொது பங்குதாரர் நிகழ்ச்சி, நோக்கு மைய பலதுறை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றால் எளிதாக்கப்படுகிறது. விஞ்ஞான பதிப்பிற்கான ஜனாதிபதி விருதானது நாட்டின் விஞ்ஞான பதிப்பிற்கான சமூகத்தை உயர்தரமான சர்வதேச பிரசித்திபெற்ற சஞ்சிகைகளில் பிரசுரிப்பதற்கும் உற்சாகம் அளித்திருக்கிறது. மதிப்பீடு செய்யப்பட்ட 9 முகாமைத்துவ அம்சங்களில் 7 உறுதியானதாக தீர்மானிக்கப்பட்டது. அவையாவன நிறுவன ஒழுங்கமைப்பு, மூலோபாயங்களின் உள்ளக வெளியக சூழலிற்கான பதில், S&T நிகழ்ச்சித்திட்டமிடல், R&D செயற்றிட்டங்கள், செயற்திட்ட முகாமைத்துவம், தரத்தை தொடர்ந்து பேணுதல், மனிதவள முகாமைத்துவம், உள்ளக தொழிற்பாடு, செயற்பட ஒழுங்கமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல், மற்றைய இரண்டு முகாமைத்துவ அம்சங்களானது தகவல் பரவுதல் மற்றும் பங்குதாரரின் முகாமைத்துவம், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பித்தலரனது நடுத்தரமானதாக தீர்கானிக்கப்பட்டது. எந்த முகாமைத்தவ அம்சங்களும் பலவீனதாக கருதப்படவில்லை. ஆகவே, NRC இனுடைய முழுச்செயற்பாடுகளை இக்காலப்பகுதியில் கணிக்கப்பட்டதிலிருந்து மிகவும் உறுதியான நிலையில் இருப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. NRC இன் வெளியீடானது தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருப்பதுடன் 2015-2020 இற்கான ஆராய்ச்சி தேசிய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பிற்கான நோக்கங்களுடன் ஒத்ததாக இருக்கின்றது. மீளாய்வுக்குழுவின் கருத்தானது கூடிய வள ஒதுக்கீடும். நேர ஒதுக்கீடும் அதன் உற்பத்தியை அதிகரிப்பதுடன் தேசிய அபிவிருத்தி நோக்கத்திற்கு பங்களிப்புச் செய்யும்.

**<u>இலங்கை தராதர அங்கீகார சபை (SLAB)</u>**

SLAB இன் மீளாய்வானது அவர்களுடைய சுயமதிப்பீட்டு அறிக்கையை பெற்றதுடன் ஆரம்பித்து ஆவணி 2014 இல் தொகுத்து மாசி 2015 இல் பூரணமாக்கப்பட்டது. NASTEC மீளாய்விற்காக கீழ்வரும் நிபுணர்களை நியமித்தது.

- *பேராசிரியர்.ரி.ஆர்.ஆரியத்ன, பௌதிகவியல் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்*
- *பேராசிரியர்.ஜே.சி.என்.ராஜேந்திரா, பௌதிகவியல் துறை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*

- *பேராசிரியர்.எஸ்.எஸ்.கொலம்பாஹே, ஓய்வுபெற்ற பொருளாதார பேராசிரியர், இலங்கை மத்திய வங்கி*
- *பேராசிரியர்.லலீன். கருணாநாயக்க, இரசாயனவியல் துறை, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்*

ஆரம்பத்தில் மீளாய்வுக்குழு NASTEC இல் சந்தித்து பின்னர் SLAB இற்கு உயர் அதிகார்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவதற்காக 3 சந்திப்புகளை மேற்கொண்டது. அத்துடன் பங்குதாரர்களுடனும் சந்தித்து அறிக்கைத் தொகுப்பை 2014 பிற்பகுதியில் செய்தது. இறுதி அறிக்கை மாசி 2015 இல் அவர்களுடைய கருத்துக்களை பெற்றதுடன் முடிக்கபட்டது. மீளாய்வின் கண்டுபிடிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

அதன் 8 வருட காலப்பகுதியில், 2013 இறுதியில் SLAB ஆனது 41 பரிசோதனை ஆய்வுகூடம், 4 அளவொப்புமை ஆய்வுகூடம், 13 மருத்துவ ஆய்வுகூடம், 5 சான்றிதழ் வழங்குனர், 1 ஆய்வு நிறுவனம் ஆகியவற்றிற்கு தராதர அங்கீகாரம் அளித்தது. மதிப்பீட்டுக் காலப்பகுதியில் (2011-2013) SLAB ஆனது 17 பரிசோதனை ஆய்வுகூடம், 2 அளவொப்புமை ஆய்வுகூடம், 9 மருத்துவ ஆய்வுகூடம், 5 சான்றிதழ் வழங்குனர், 1 ஆய்வு நிறுவனம் ஆகியவற்றிற்கு தராதர அங்கீகாரம் அளித்தது. அத்துடன் SLAB ஆனது ஆசிய பசுபிக் தராதர பரஸ்பர அங்கீகரிப்பு ஒழுங்கமைப்பு, சர்வதேச ஆய்வுகூடக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்கு கையொப்பதாரராக அனுமதியைப் பெற்றது.

ஏற்றுமதிக்கான தராதர சான்றிதழானது சோதித்தல் மற்றும் சான்றிதழ் வழங்கல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. தற்போது இது மற்ற நாடுகளில் வழங்கப்படும் சோதனை அறிக்கை மற்றும் சான்றிதழ்களிற்கு இணைப்பாக அங்கீகரிக்கப்பட்டதுடன் இலங்கை பொருட்களிற்கு சந்தைப்படுத்தலிற்கும் வழியமைத்துள்ளது. SLAB அவர்களுடைய நிதி நிலைமையை 2011-2013 இல் அங்கீகாரம் மற்றும் பயிற்சி கட்டணத்தின் மூலம் பலப்படுத்தியுள்ளது. அங்கீகார செயற்பாடானது பல துறையில் சில காரணங்களால் SLAB இன் கட்டுப்பாட்டையும் மீறி தடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமை அது சார்ந்த அதிகாரசபைகளினால் தாமதமின்றி விபரிக்கப்படவேண்டும். தேசிய அளவில் அளவியல் உட்கட்டமைப்புகள் போதுமான அளவில் இல்லாமை சில சோதனைகளை செய்ய தடையாக இருக்கிறது. அரசாங்க நிறுவனங்கள் தராதரத்தை உறுதிப்படுத்த தயக்கமாக இருத்தல் பிரதான பிரச்சனையாகும். அரச வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வுகூடங்களிற்கு தராதரமளிப்பை சுகாதார அமைச்சு கட்டாயமாக்காதிருப்பதும் ஒரு விடயமாகும்.

# சர்வதேச உறவுகள்

## NAM S&T Center இனால் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகள்

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான, தொழில்நுட்பத்துக்கான நிலையம் (NAM S&T Centre) ஆனது நாடுகளிற்கு இடையிலான அமைப்பாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் விஞ்ஞான மற்றும் சமூக பொருளாதார பிரச்சனைகள் சம்மந்தமாக பயிற்சி நிகழ்வுகளை ஒழுங்கமைப்பது இதன்

செயல்பாடுகளில் ஒன்றாகும்.அத்துடன் NAM நாடுகளுடைய வெளிநாட்டு அமைச்சர்களின் சந்திப்பில் அல்லது NAM நாடுகளின் மாநில அல்லது அரசாங்க தலைமையகத்தால் உச்சி மாநாடுகளில் தரப்படுகின்ற செயற்பாடுகளையும் செய்கின்றது. அத்தடன் இம்மையம் அதன் குறிக்கோளின் எல்லைக்குள் ஆளும் சபையின் அங்கீகாரத்துடன், ஐக்கிய நாடுகள் மற்றும் அதன் சிறப்பு நிறுவனங்களுடன் மற்றும் வேறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் முறையாக ஒத்துழைப்பை மேற்கொள்கின்றது.

**NASTEC ஆனது NAM S&T நிலையத்திற்கான இலங்கையின் மையப்புள்ளியாகும்.**

NAM S&T Center இனால் இலங்கை விஞ்ஞானிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகள்- 2015

1. இந்தியாவில் நடைபெற்ற மூலிகை மருத்துவத்திற்கான சர்வதேச பயிற்சி கருத்தரங்கில் கலாநிதி.ஜி.ஏ.எஸ்.பிறேமகுமார தெரிவுசெய்யப்பட்டிருந்தார் ஆனால் உடல்நிலை பிரச்சனையால் பங்குபற்றவில்லை. (பங்குனி)
2. ZMT பிறீமன் இன் வெப்பமண்டல கரையோர கடல் சூழலியல் மற்றும் உயிர இரசாயனவியலுக்கான கூட்டுறவு அறிவித்தல் அறிவிக்கப்பட்டது. (பங்குனி)
3. 2016/2016 இற்கான ஆராய்ச்சி கூட்டுறவு அறிவித்தல் நிறுவனங்களிற்கு அனுப்பப்பட்டதுடன் (பங்குனி)
   இலங்கைலிருந்து 4 பேர் விண்ணப்பித்திருந்தார்கள்
4. ICCBS கூட்டுறவிற்கான NAM S&T கூட்டுறவு நிலையத்தின் அறிவித்தல் அறிவிக்கப்பட்டதுடன் ITI இன் திருமதி.வசுந்திரா திவிசேகரவிற்கு இது வழங்கப்பட்டது.
5. சாம்பியாவில் வானிலை ஆய்வு திணைக்களத்தின் திரு.நுவான் குமாரசிங்க மின்னல் ஆபத்துக்களை தடுக்கும் மூலோபாய தலையீடுகள் சார்ந்த கருத்தரங்கில் 11-13 ஆவணி 2015 இல் பங்கேற்றார்.
6. நனோதொழில்நுட்பம் சார் ஆராய்ச்சி உதவிதிட்டத்தின் அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு கலாநிதி.சி.ஏ.ஹெற்றியாராய்ச்சிக்கு இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
7. தென் ஆபிரிக்காவின் விஞ்ஞான சார்பான கலந்துரையாடலில் 8-9 மார்கழி 2015இல் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி.முடித லியனாகெதற இலங்கை சார்பாக பங்கேற்றார்.
8. DST (தென்ஆபிரிக்கா) இன் கனிமபதப்படுத்தல், கனிமதுாய்மித்தலிற்கான கூட்டுறவுப்பயிற்சி அறிவித்தல் S&T நிறுவனங்களிற்கு விநியோகிக்கப்பட்டது.

# NASTEC இன் வேறு செயற்பாடுகள்

### இளைய விஞ்ஞானிகள் மன்றம் *(YSF)*

இளைய விஞ்ஞானிகள் மன்றத்தின் கோட்பாடு புடபெஸ்ற், கங்ஹேரியில் 1999 இல் 26ம் திகதி ஆனி முதல் 01 ஆடி வரை இடம்பெற்ற 21ம் நூற்றாண்டிற்கான விஞ்ஞானத்தின் உலக மாநாட்டில் வெளியிடப்பட்டது. இது ஐக்கிய தேசிய கல்வி, விஞ்ஞான மற்றும் கலாச்சார அமைப்பு(UNESCO) மற்றும் விஞ்ஞானத்திற்கான சர்வதேச சபை(ICS) இன் ஆதரவின் கீழ் இடம்பெற்றது.

இதற்கு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் உயர் திரு பற்றி வீரக்கோன் தலைமையுடன் மற்றும் NASTEC இன் தலைவர் கலாநிதி.ஆர்.ஓ.பி. விஜேயசேகர மற்றும் பேராசிரியர். திஸ்ஸ விதாரண ஆகிய குழு சமூகமளித்தது.

இலங்கையின் YSF ஆனது NASTEC இல் 2000 ஆம் ஆண்டில், இளைய விஞ்ஞானிகளிற்கு S&T சார்ந்த பிரச்சனைகளிற்கு கருத்து கூறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் YSF ஆனது NASTEC இனுடன் இணைந்து திறன் அபிவிருத்தி கருத்தரங்குகளையும் இளைய விஞ்ஞானிகளிற்காக ஒழுங்கமைக்கிறது.

YSF கருத்தரங்கானது 2012 இல் ஆரம்பிக்கப்பட்டு, இளைய விஞ்ஞானிகளிற்கு தங்களுடைய ஆராய்ச்சி சார் வேலைகளை விஞ்ஞான சமூகத்திற்கு முன்னிலைப்படுத்தும் சந்தர்ப்பத்தை வழங்குவதால் பிரபலமான நிகழ்வாக இருக்கிறது.

தற்போது 600 ஐ விட அதிகமான அங்கத்தவர்களை YSF கொண்டுள்ளது. YSF இன் வருடாந்த கூட்டம் இற்கான வழிகாட்டும் குழுவிற்கு தெரிவு செய்வதற்காக நடாத்தப்படுகிறது.

## YSF வருடாந்த பொதுக்கூட்டம் – 2015

இளைய விஞ்ஞானிகள் மன்றமானது முதன்முறையாக அவர்களுடைய அங்கத்துவர்கள் அவர்களுடைய ஆராய்ச்சி வேலைகளை விஞ்ஞான சமூகத்திற்கு முன்னிலைப்படுத்துவதற்காக கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. இது YSF வருடாந்த பொதுக்கூட்டத்துடன் சேர்த்து 23 தை 2015 இல் ஹெக்ரர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில்(HARTI, கொழும்பு) நடாத்தப்பட்டது.

YSF அங்கத்தவர்களிடமிருந்து, NASTEC 53 வாய்மொழி மூலமான சமர்ப்பணங்களை 82 விரிவான சுருக்கங்களிலிருந்து பெற்றது. ஒவ்வொரு விரிவான சுருக்கங்களும் இரு சிரேஷ்ட விஞ்ஞானிகளால் YSF இற்கு கௌரவ சேவையாக மதிப்பீடு செய்யப்பட்டது. அவர்களின் பரிந்துரையின் கீழ் விரிவான சுருக்கங்கள் ஒப்புதல் செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட சுருக்கங்கள் மன்ற நடவடிக்கைப்பதிப்பில் பிரசுரிக்கப்பட்டன. வாய்மொழி மூலமான சமர்ப்பணங்கள் கீழ்வரும் 5 கருப்பிரிவுகளில் நடாத்தப்பட்டது.

சகல வாய்மூல சமர்ப்பணங்களும் அழைக்கப்பட்ட சிரேஷ்ட விஞ்ஞானிகளால் மதிப்பீடு செய்யப்பட்டு ஒவ்வொரு அமர்வின் 3 சிறந்த தொகுப்பாளரிற்கும் தகுதி சான்றிதழ் வழங்கப்பட்டன.

**அமர்வு ஒழுங்கமைப்பாளர்கள்**

| | |
|---|---|
| விவசாய விஞ்ஞான அமர்வு | கலாநிதி.லலித் சூரியகொட, சிரேஷ்ட விரிவுரையாளர், பயிர் அறிவியல் பிரிவு, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் |
| சூழலியல் விஞ்ஞானம் | கலாநிதி.இந்திக்க ஹெரத், மண்ணியல் விஞ்ஞானி, மண் மற்றும் தாவர ஊட்டச்சத்துப்பிரிவு, தெங்கு ஆராய்ச்சி நிலையம் |
| மருத்துவ, சுகாதார விஞ்ஞானம் | கலாநிதி.மேனுகா அறவ்வல, மூலிகை தொழில்நுட்ப பிரிவு கைத்தொழில் தொழில்நுட்ப நிலையம் |
| உயிர்இரசாயனம் | திருமதி.லோகினி ஆதித்தன், சிரேஷ்ட விரிவுரையாளர், உயிர் இரசாயனவியல் திணைக்களம், மருத்தவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |
| சமூக விஞ்ஞானம் | திரு.ரி.யு.எஸ்.பீரிஸ், உயிரியல் புள்ளிவிபரம், மீன்வள பிரிவு, வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை |
| பௌதிக விஞ்ஞானம், பொறியியல் மற்றும் IT | திரு.அஸ்வின் விக்ரமசூரிய, புவியியல் பிரிவு, கலைப்பீடம் , பேராதனைப் பல்கலைக்கழகம் |
| உயிர்த்தொழில்நுட்பம், மூலக்கூறு உயிரியல் நுண்ணுயிரியலும் | கலாநிதி.புத்திக அருக்கொட, விவசாய, பயிரிடல் துறை, பொறியியல் தொழில்நுட்ப பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |

**அமர்வு மதிப்பீட்டாளர்கள்**

| | |
|---|---|
| விவசாய விஞ்ஞான அமர்வு | பேராசிரியர்.ஆர்.பி.மாபா<br>மண்ணியல் விஞ்ஞான பிரிவு,<br>விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.சுனில் திரிகவெல<br>விவசாய, பயிரிடல் துறை, பொறியியல் தொழில்நுட்ப பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.ஜனக் விதானாராச்சி<br>விலங்கியல் விஞ்ஞான பிரிவு,<br>விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் |
| சூழலியல் விஞ்ஞானம் | கலாநிதி.ஜி.டி.கபில குமார<br>ஏற்றுமதி விஞ்ஞான பிரிவு,<br>விவசாய விஞ்ஞான பீடம்,<br>சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.மெத்திகா விதானகே,<br>ஆராய்ச்சியாளர் (இரசாயன மற்றும் சூழல் முறைமை மாதிரி),<br>தேசிய அடிப்படைக் கல்விக்கான நிலையம் |
| உயிர்த்தொழில்நுட்பம், மூலக்கூறு உயிரியல் நுண்ணுயிரியலும் | கலாநிதி.பந்துனி லியனஹே<br>பொறியியல் தொழில்நுட்ப பீடம்,<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.பிரதீபா பண்டாரநாயக்க,<br>பணிப்பாளர்,<br>விவசாய உயிர்த்தொழில்நுட்ப நிலையம், விவசாய பீடம்,<br>பேராதனைப் பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.பி.ஏ.டி.எச்.நயன குணதிலக<br>ஆராய்ச்சி விஞ்ஞானி<br>உயிர்த்தொழில்நுட்ப பிரிவு<br>கைத்தொழில் தொழில்நுட்ப நிலையம் |
| | கலாநிதி.சிரோமி ஹடுன்னேதி,<br>பதில் பணிப்பாளர்,<br>உயிர்த்தொழில்நுட்பம், மூலக்கூறு உயிரியல் நுண்ணுயிரியல் நிலையம் |

| | |
|---|---|
| மருத்துவ, சுகாதார விஞ்ஞானம், உயிர்த்தொழில்நுட்பம் | கலாநிதி.டில்ஷானி திஸாநாயக்க,<br>மருத்தவ விஞ்ஞான பீடம்,<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.கருக்ஷி அறம்பேபொல,<br>மருத்தவ விஞ்ஞான பீடம்,<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.துலானி பெனெராகம,<br>மருத்தவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |
| உயிர் இரசாயனம், | கலாநிதி.தெரன்ஸ் மடுஜித்,<br>விவசாய உணவு விஞ்ஞான, தொழில்நுட்ப துறை, விவசாய பீடம், |
| | கலாநிதி.சுரேக்கா சக்கரவர்த்தி,<br>மருத்தவ விஞ்ஞான பீடம்,<br>களனி பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.பி.பி.ஹல்ஹேன,<br>மருத்தவ விஞ்ஞான பீடம்,<br>களனி பல்கலைக்கழகம் |
| சமூக விஞ்ஞானம் | கலாநிதி.ஆர்.அபேநாயக்க,<br>தலைவர்/ சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>விவசாய வியாபார முகாமைத்துவப் பிரிவு,<br>விவசாய, தோட்டப்பயிர்ச் செய்கை முகாமைத்துவ பீடம்,<br>வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை. |
| | பேராசிரியர்.எஸ்.எஸ்.கொலம்பாஹே<br>இல.90,<br>நுகேகொட |
| | கலாநிதி.சேபாலிஹா வெலிக்கல<br>சமூக விஞ்ஞானம் பீடம்<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| பௌதிக விஞ்ஞானம், பொறியியல் மற்றும் IT | கலாநிதி.அசித்த பண்டாரநாயக்க,<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>கணனி பொறியியல் பிரிவு,<br>பொறியியல்பீடம்,<br>பேராதனைப் பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.சுலந்த ஜயவர்த்தன, சிரேஷ்ட விரிவுரையாளர், பூமிவள பொறியியல் பிரிவு,<br>பொறியியல் பீடம்,<br>மொரட்டுவைப் பல்கலைக்கழகம் |
| | பேராசிரியர்.லலீன். கருணாநாயக்க,<br>இரசாயனவியல் துறை,<br>ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |

**தகுதி சான்றிதழ் வெற்றியாளர்கள்**

| விவசாய விஞ்ஞான அமர்வு<br><br>(5 வெற்றியாளர்கள் 11 தொகுப்பாளர்களில்) | சமூக விஞ்ஞானம்<br><br>(4 வெற்றியாளர்கள் 9 தொகுப்பாளர்களில்) |
|---|---|

| | |
|---|---|
| ஆர்.எச்.எம்.ரத்னாயக்க<br>ஏம்.டி.எம்.சமிக்கார<br>எல்.டி.சி.மென்டிஸ்<br>பி.எஸ்.ஒபடமுதலிஹே<br>எஸ்.செந்தூரன் | ஜி.எச்.ஐ.அஞ்சலி<br>ஏல்.ஜி.ரி.ஷானிகா<br>எம்.எம்.ஆர்.பாலசூரிய<br>டி.ரி.எச்.ஆனந்த |
| உயிர் இரசாயனம்,<br><br>(3 வெற்றியாளர்கள் 6 தொகுப்பாளர்களில்)<br>டபிள்யு.பி.கே.எம்.அபயசேகர<br>என்.எஸ்.போபாகே<br>பி.கே.ஜி.எஸ்.எஸ்.பண்டார | சூழலியல் விஞ்ஞானம்<br><br>(3 வெற்றியாளர்கள் 6 தொகுப்பாளர்களில்)<br>டி.எஸ்.என்.முனசிங்க<br>ஏ.எம்.ஹம்மடென்பில<br>டி.என்.எஸ்.அதனாயக்க |
| பௌதிக விஞ்ஞானம், பொறியியல் மற்றும் IT<br><br>(3 வெற்றியாளர்கள் 5 தொகுப்பாளர்களில்)<br>பி.எச்.பெரெரா<br>ரி.என்.பெர்னான்டோ<br>டி.எஸ்.சம்பத் | உயிர்த்தொழில்நுட்பம், மூலக்கூறு உயிரியல் நுண்ணுயிரியலும்<br><br>(3 வெற்றியாளர்கள் 7 தொகுப்பாளர்களில்)<br>என்.எம்.சி.நயனாகாந்த<br>டி.எம்.டபிள்யு.திவிசேகர<br>ரி.எம்.இரந்திகா |
| மருத்துவ, சுகாதார விஞ்ஞானம்<br><br>(3 வெற்றியாளர்கள் 6 தொகுப்பாளர்களில்)<br>எல்.வி.ஆதித்தன்<br>எம்.நதிகலா<br>ஈ.எம்.எஸ்.பண்டார | |

**வருடாந்த பொதுக்கூட்டம் - 2015**

AGM இல் கீழுள்ள அங்கத்தவர்கள் YSF இன் 2016 இற்கான வழிகாட்டும் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டார்கள்.

- திருமதி.லோகினி ஆதித்தன், சிரேஷ்ட விரிவுரையாளர், உயிர் இரசாயனவியல் திணைக்களம், மருத்தவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- கலாநிதி.தர்சினி பண்டுப்பிரிய, சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், இழையவளர்ப்புப் பிரிவு, தெங்கு ஆராய்ச்சி நிலையம்
- கலாநிதி.பிரதீபா பண்டாரநாயக்க, பணிப்பாளர், விவசாய உயிர்த்தொழில்நுட்ப நிலையம், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.அசித்த பண்டாரநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர், கணனி பொறியியல் பிரிவு, பொறியியல்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.இந்திக்க ஹெரத், மண்ணியல் விஞ்ஞானி, மண் மற்றும் தாவர ஊட்டச்சத்துப்பிரிவு, தெங்கு ஆராய்ச்சி நிலையம்
- கலாநிதி.சுலந்த ஜயவர்த்தன, சிரேஷ்ட விரிவுரையாளர், பூமிவள பொறியியல் பிரிவு, பொறியியல் பீடம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.மெத்திகா விதானகே, ஆராய்ச்சியாளர் (இரசாயன மற்றும் சூழல் முறைமை மாதிரி), தேசிய அடிப்படைக் கல்விக்கான நிலையம்
- கலாநிதி.ஆர்.எம்.நிலாந்தி விஜயவர்த்தன, சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், பின்னைய அறுவடைத்தொழில்நுட்ப நிறுவனம்
- கலாநிதி.லலித் சூரியகொட, சிரேஷ்ட விரிவுரையாளர், பயிர் அறிவியல் பிரிவு, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.சாலிந்த பெனெறாகம, சிரேஷ்ட விரிவுரையாளர், பயிர் அறிவியல் பிரிவு, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.செல்வலக்ஷ்மி செல்வேந்திரன், முக்கிய ஆராய்ச்சி விஞ்ஞானி, மூலிகை தொழில்நுட்ப பிரிவு கைத்தொழில் தொழில்நுட்ப நிலையம்
- கலாநிதி.அமிந்த பெரேரா, நிதி, வியாபார கல்வி பீடம், வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை.
- திரு.பி.சிவசங்கர், விவசாய பீடம், சப்ரகமுவ பல்கலைக்கழகம்

27 பங்குனி 2015 இல் NASTEC ஆனது YSF உடன் இணைந்து கைத்தொழில் தொழில்நுட்ப நிலையத்தில் "விஞ்ஞானிகளிற்கான வேலை வாழ்க்கை சமநிலை : வெற்றிக்கான வழி" என்ற கருத்தரங்கை நடாத்தியது. இதில் 70 இற்கும் அதிகமானோர் பங்குபற்றியிருந்தனர்.

வேலை-வாழ்க்கை சமநிலைக்கான தந்திரோபாயங்கள் மூலம் வாழ்க்கைத் தரத்தை நிலையை உயர்த்துவது இந்த கருத்தரங்கின் நோக்கமாக இருந்தது.

**கருத்தரங்கிற்கு கலந்துரையாடலிற்கு வந்திருந்தவர்களின் பெயர்கள் பின்வருமாறு**

- **வேலை-வாழ்க்கைக்கான சுயமுகாமைத்துவம்**
  திருமதி.சுனேத்ரா ஜயரத்னே நுஹுவேல,
  CEO, இலங்கை நிர்வாக வல்லுனர் கழகம்

- **குழு வேலையின் வேலை வாழ்க்கை சமநிலையிலான பங்கு**
  திருமதி.பவித்ரா விக்ரமசூரிய,
  சிரேஷ்ட விரிவுரையாளர்,
  தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனம்

- **வாழ்க்கை சமநிலைக்கான நேர முகாமைத்துவம்**
  திரு.இந்திக பெரேரா
  ஆலோசகர், திறன் விருத்தி நிதியம்

- **வாழ்க்கை சமநிலைக்கான இசை மூலமான அழுத்த முகாமைத்துவம்**
  கலாநிதி.எஸ்.ஸ்ரீதுங்க
  சமூக மருத்துவ ஆலோசகர்
  தொற்ற நோய்கள் அற்ற பிரிவு, சுகாதார அமைச்சு

## "இளைய விஞ்ஞானிகளிற்கான வெற்றிகரமான அராய்ச்சி தொழிலை வடிவமைத்தல்" என்ற கருத்தரங்கு

28 சித்திரை 2015 இல் NASTEC ஆனது YSF உடன் இணைந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தின் PGIA அரங்கில் "இளைய விஞ்ஞானிகளிற்கான வெற்றிகரமான ஆராய்ச்சி தொழிலை வடிவமைத்தல்" என்ற கருத்தரங்கை நடாத்தியது. இதில் 73 பேர் பங்குபற்றியிருந்தனர். இந்த செயலமர்வில் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தில் இணைந்துள்ள இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தில் உள்ள இளம் கல்வியலாளர்கள் சமூகமளித்திருந்தனர். 3 சிறப்பு பேச்சாளர்கள் உரையாற்றினர்.

**கருத்தரங்கின் கலந்துரையாடலிற்கு வருகை தந்திருந்தவர்களின் பெயர் விபரம் கீழ்வருமாறு**

- **இலங்கையில் ஆராய்ச்சிக்கான நிதியை தேடுதல்**
  கலாநிதி.நந்தா குணவர்த்தன
  பணிப்பாளர், சர்வதேச ஆராய்ச்சி நிலையம், பேராதனைப் பல்கலைக்கழகம்

  கலாநிதி.பிரதீபா பண்டாரநாயக்க,
  பணிப்பாளர், விவசாய உயிர்த்தொழில்நுட்ப நிலையம், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

- **முற்போக்கான முதுகலைக்கான பாதை**
  குழுத் தலைவர்: கலாநிதி.சாலிந்த பெனெறாகம, சிரேஷ்ட விரிவுரையாளர், பயிர் அறிவியல் பிரிவு, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
  குழு அங்கத்தவர்: YSF இன் வழிகாட்டும் குழு அங்கத்தவர்கள்

- **பின்-கலாநிதிப்படிப்பிற்கான சந்தர்ப்பங்கள்**
  பேராசிரியர்.மிஸ்ஸக பி.பி.விஜயகுணவர்த்தன,
  சிரேஷ்ட பேராசிரியர், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

## "உயர் தாக்கமுள்ள ஆராய்ச்சிக்கட்டுரையை எழுதுதல்" என்ற கருத்தரங்கு

9 மற்றும் 10 ஆடி 2015 இல் NASTEC ஆனது YSF உடன் இணைந்து ஹெக்ரர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் (HARTI, கொழும்பு) இந்த கருத்தரங்கை நடாத்தியது.

இளைய விஞ்ஞானிகளிற்கு அவர்களுடைய விஞ்ஞான அறிவை, அனுபவத்தை ஆராய்ச்சி வேலைகளை சிறந்த முறையில் பிரசுரிக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். இதில் நாட்டமுடைய 130 பேர் பங்குபற்றியிருந்தனர். இந்த செயலமர்வில் இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தில் உள்ள இளம் கல்வியலாளர்கள் சமூகமளித்திருந்தனர்.

**கருத்தரங்கின் கலந்துரையாடலிற்கு வருகை தந்திருந்தவர்களின் பெயர் விபரம் கீழ்வருமாறு**

- கருத்தரங்கிற்கான அறிமுகம் - கலாநிதி.சாலிந்த பெனெறாகம, இளைய விஞ்ஞானிகள் மன்றத் தலைவர், NASTEC

- ஆராய்ச்சிக்கட்டுரையை வெளியிடல்
  ***(உள்ளடக்கம்:*** யார் வெளியிட வேண்டும்*:* என்ன, எப்போது, எங்கே, ஏன் வெளியிட வேண்டும்*)*
  - கலாநிதி.சாலிந்த பெனெறாகம, சிரேஷ்ட விரிவுரையாளர், பயிர் அறிவியல் பிரிவு, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

- தொழில்நுட்பமாக எழுதுதல்
  ***(உள்ளடக்கம்:*** எழுதும் போது, வசனம் அமைக்கும் போது, இலக்கண, எழுத்துப் பிழையின்றி, சொற் குழப்பமின்றி சரியான ஆங்கிலத்தில் எழுதுதல்; தெளிவற்ற வசனங்களை எழுதுதல், தவிர்த்தல்*)*
  - பேராசிரியர்.புத்தி மரம்பே, பணிப்பாளர், விவசாயப்பிரிவு, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

- ‘‘பொருள் மற்றும் வழிமுறை’’ துல்லியமான மறுஉருவாக்கத்தை நோக்கி
  ***(உள்ளடக்கம்:*** பொருள் மற்றும் வழிமுறை பகுதியில் எவற்றை எழுதுவது எவற்றை எழுதக்கூடாது, அளவீடுகளை எழுதும் முறை, SI அலகின் சரியான முறை, புள்ளிவிபரவியல் பகுப்பாய்வினை எழுதும் முறை, பரிசோதனை வடிவமைப்பு)
  - கலாநிதி.அனுர தர்ஷன் டீ சில்வா, சிரேஷ்ட ஆராய்ச்சி விஞ்ஞானி, ஜீன்ரெக் ஆராய்ச்சி நிலையம்

- அட்டவணை, படங்களை எழுதும் முறை
  ***(உள்ளடக்கம்:***விபரமான புள்ளிவிபரவியல் முறையை தெரிவு செய்தல், அட்டவணை, படங்களை குறிக்கும் முறையை தெரிவு செய்தல், அட்டவணை, படங்களை விபரித்தல்)
  - கலாநிதி.ரேணுகா சில்வா, வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை

- ‘‘பெறுபேறு சார் முடிவுகள் மற்றும் கலந்துரையாடல்’’ அல்லது ‘‘பெறுபேறு சார் முடிவுகள்’’ மற்றும் ‘‘கலந்துரையாடல்’’
  ***(உள்ளடக்கம்:***எவ்வாறு பெறுபேறு சார் முடிவுகள் மற்றும் கலந்துரையாடல் பகுதியை பிரித்து அல்லது சேர்த்து எழதுதல், இந்த சந்தர்ப்பங்களில் எவற்றை எழுத வேண்டும், எவற்றை எழுதக்கூடாது,)
  - பேராசிரியர்.என்.சலீம், தாவரவியற் பிரிவு, பிரயோக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- உயர் தாக்கத்தை ஏற்படுத்தல்
  ***(உள்ளடக்கம்:*** குழு மதிப்பீட்டு சஞ்சிகை என்றால் என்ன? பிரதி அல்லது ஒன்லைன், திறந்த அல்லது கட்டப்படுத்தப்பட்ட வழி, h-சுட்டெண், 1-10 சுட்டெண், பிரசித்தி பெறுவது எப்படி? )
  - பேராசிரியர்.சீதா விக்ரமசிங்க, பொதுப் பணிப்பாளர், தேசிய விஞ்ஞான கழகம்

- ஒரு வகையான கட்டுரை: கருத்துத் திருட்டை தவிர்த்தல்

(*உள்ளடக்கம்:* எது கருத்துத் திருட்டு, எது கருத்துத் திருட்டு இல்லை, தொழில்முறை கருத்துத் திருட்டைக் கண்டுபிடிக்கும் மென்பொருள், கருத்துத் திருட்டைக் கண்டுபிடிக்கும் ஒன்லைன் சரிபார்ப்புகள், இதைப்பற்றி கருத்தில் எடுக்க வேண்டுமா? )

- கலாநிதி.பிரசாத் ஜயவீர, பிரயோக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

♦ பயிற்சி அமர்வு I : தவறுகளை கண்டுபிடித்தல்

(*உள்ளடக்கம்:* இதில் பங்குபற்றுபவர்களுக்கு கட்டுரையின் பகுதிகள் வழங்கப்பட்டு, அவர்களால் தவறுகளை கண்டுபிடிக்க முடிகிறதா எனப் பாரத்தல், திரும்ப சரியாக எழுத விடுதல் )

- கலாநிதி.சர்மலி நாஹல்லஹே, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

♦ பயிற்சி அமர்வு II : தவறுகளை கண்டுபிடித்தல்

(*உள்ளடக்கம்:* இதில் பங்குபற்றுபவர்களுக்கு கட்டுரையின் அட்டவணை, படங்கள் வழங்கப்பட்டு, அவற்றை விஞ்ஞான முறையில் சரியாக எழுத விடுதல் )

- கலாநிதி.சாலிந்த பெனெறாகம, சிரேஷ்ட விரிவுரையாளர், பயிர் அறிவியல் பிரிவு, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

## "வெற்றிகரமான ஆராய்ச்சித் திட்டத்தை எழுதுதல் திடமான வழிமுறை- " என்ற கருத்தரங்கு

5 மற்றும் 6 ஐப்பசி 2015 இல் NASTEC ஆனது YSF உடன் இணைந்து தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இந்த கருத்தரங்கை நடாத்தியது.

இளைய விஞ்ஞானிகளிற்கு உயர் தர ஆராய்ச்சித் திட்டத்தை எழுத ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். இதில் நாட்டமுடைய 60 கல்வியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இது அவர்களிற்கு சரியான முறையில் நிதியைப் பெறக்கூடிய ஆராய்ச்சித் திட்டத்தை எழுத உதவும்.

**கருத்தரங்கின் கலந்துரையாடலிற்கு வருகை தந்திருந்தவர்களின் பெயர் விபரம் கீழ்வருமாறு**

- கலாநிதி.நந்தா குணவர்த்தன
பணிப்பாளர், சர்வதேச ஆராய்ச்சி நிலையம், பேராதனைப் பல்கலைக்கழகம்

- கலாநிதி.பிரதீபா பண்டாரநாயக்க,
பணிப்பாளர், விவசாய உயிர்த்தொழில்நுட்ப நிலையம், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

**கருத்தரங்கின் கலந்துரையாடலில் கீழ்வருவன பற்றி கலந்துரையாடப்பட்டது.**

- நிதியை வழங்குவது யார்?
- ஆராய்ச்சிக்கான பிரச்சனையை முறைப்படுத்துவது எப்படி?
- குறிக்கோளை அமைப்பது எப்படி?
- ஆராய்ச்சி முறையை அமைப்பது எப்படி?
- வரவு செலவுத்திட்டத்தை அமைப்பது எப்படி?
- எப்படி ல்லொவற்றையும் ஒருங்கிணைப்பது?

# எமது உத்தியோகத்தர்கள்

**<u>நிறைவேற்று உத்தியோகத்தர்கள்</u>**

**பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி**

கலாநிதி.முடித லியனாகெதற B.Sc., M.Phil (பேராதனை), Ph.D. (சியோல்)



**சிரேஷ்ட விஞ்ஞானி**



திருமதி.ஆஷா பிரதெனிய *B.Sc., M.Sc.* (பேராதனை*)*

**உதவிப் பணிப்பாளர் - நிதி மற்றும் நிர்வாகம்**



திருமதி.குமாரி பீரிஸ் (B.Com ஸ்ரீ ஜெயவர்த்தனபுர) *APFA, CBA (ICASL)*

**நிறைவேற்றுச் செயலாளர்**



திரு.றுக்மன் கூறே புலத்சிங்கல

**சிரேஷ்ட விஞ்ஞானி**



திரு.இந்திக்க ஸ்ரீவர்த்தன B.Sc. (Hons), MEcon. (கொழும்பு)

**உதவி உத்தியோகத்தர்கள்**

**செயற்திட்ட உதவியாளர் - நிதி** | **செயற்றிட்ட உதவியாளர்கள்**



திரு.துசித்த ரத்னாயக்க (M.A.A.T.).



செல்வி.ஈ.மகேஷி பெர்னாந்து
B.Sc. (Special), ஸ்ரீ ஜெயவர்த்தனபுர



திருமதி.ஹிமாலி பாலசூரிய
B.Sc. (Special), M.Sc. (பேராதனை)

**முகாமைத்துவ உதவியாளர்**



திருமதி.நில்மினி பெரேரா
(B.Sc ஸ்ரீ ஜெயவர்த்தனபுர)



செல்வி.சயூமி விஜயசிங்க



செல்வி.நிஷாந்தி மகரகே

**வரவேற்பாளர்**



திருமதி.தக்ஷினி கருணாதிலஹே

**சாரதிகள்**



திரு.அனில் ஹெற்றியாராய்ச்சி



திரு.பிரபாத் ஜயசாந்த



திரு.பிரதீப் இரந்த

**அலுவலக உதவியாளர்**



திரு.ஏ.டி.தனபால



திரு.நிசாந்த பியதாஸ

# உத்தியோகத்தர் செய்திகள்

## *உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய நிகழ்வுகள்*

சிரேஷ்ட விஞ்ஞானி, திருமதி.ஆஷா பிரதெனிய 15- 16 கொழும்பில் இடம்பெற்ற ''சமூக பொருளாதார சமத்துவத்தை மேம்படுத்தல்'' என்ற சர்வதேச செயலமர்வில் பங்கேற்றார். அவர் சமூக-பொருளாதார

சமபங்குக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மேலாண்மை” என்ற பத்திரிகையை முன்னிலைப்படுத்தினார்.

அலுவலக உதவியாளர், திரு.நிசாந்த பியதாஸ 14-15 புரட்டாதி 2015 இல் திறன் விருத்தி நிதியத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட “அலுவலக சாதன கட்டுப்பாடு” என்ற செயலமர்வில் பங்கேற்றார்.

சிரேஷ்ட விஞ்ஞானி, திரு.இந்திக்க ஸ்ரீவர்த்தன 26 ஆடி 2015 இல் கொழும்பில் இடம்பெற்ற “அறிவு பொருளாதாரத்தில் உள்ள சக்தி சார் சவால்கள்” என்ற சர்வதேச செயலமர்வில் பங்கேற்றார்.

# நன்றி தெரிவித்தல்

**ஆலோசனை மன்றம்**

☞ **YSF இன் 2015 இற்கான வழிகாட்டும் குழு**

- திருமதி.லோகினி ஆதித்தன், சிரேஷ்ட விரிவுரையாளர், உயிர் இரசாயனவியல் திணைக்களம், மருத்தவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
- கலாநிதி.தர்சினி பண்டுப்பிரிய, சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், இழையவளர்ப்புப் பிரிவு, தெங்கு ஆராய்ச்சி நிலையம்
- கலாநிதி.பிரதீபா பண்டாரநாயக்க, பணிப்பாளர், விவசாய உயிர்த்தொழில்நுட்ப நிலையம், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.அசித்த பண்டாரநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர், கணனி பொறியியல் பிரிவு, பொறியியல்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.இந்திக்க ஹெரத், மண்ணியல் விஞ்ஞானி, மண் மற்றும் தாவர ஊட்டச்சத்துப்பிரிவு, தெங்கு ஆராய்ச்சி நிலையம்
- கலாநிதி.சுலந்த ஜயவர்த்தன, சிரேஷ்ட விரிவுரையாளர், பூமிவள பொறியியல் பிரிவு, பொறியியல் பீடம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்

- கலாநிதி.மெத்திகா விதானகே, ஆராய்ச்சியாளர் (இரசாயன மற்றும் சூழல் முறைமை மாதிரி), தேசிய அடிப்படைக் கல்விக்கான நிலையம்
- கலாநிதி.ஆர்.எம்.நிலாந்தி விஜயவர்த்தன, சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர், பின்னைய அறுவடைத்தொழில்நுட்ப நிறுவனம்
- கலாநிதி.லலித் சூரியகொட, சிரேஷ்ட விரிவுரையாளர், பயிர் அறிவியல் பிரிவு, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.சாலிந்த பெனெறாகம, சிரேஷ்ட விரிவுரையாளர், பயிர் அறிவியல் பிரிவு, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
- கலாநிதி.செல்வலக்ஷ்மி செல்வேந்திரன், முக்கிய ஆராய்ச்சி விஞ்ஞானி, மூலிகை தொழில்நுட்ப பிரிவு கைத்தொழில் தொழில்நுட்ப நிலையம்
- கலாநிதி.அமிந்த பெரேரா, நிதி, வியாபார கல்வி பீடம், வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை.
- திரு.பி.சிவசங்கர், விவசாய பீடம், சபரகமுவ பல்கலைக்கழக

## ☞ தேசிய ஆராய்ச்சி சபை (NRC)

- பேராசிரியர்.எம்.ஜே.எஸ். விஜேயரத்ன, விஞ்ஞான பீடம், களனிப்பல்கலைக்கழகம் (மீளாய்வுக்குழுத் தலைவர்)
- பேராசிரியர்.கமல் ஐ டீன், மருத்துவபீடம். களனிப்பல்கலைக்கழகம்
- பேராசிரியர்.கமல்.பி.குணஹெரத், இயற்கை விஞ்ஞான பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- பேராசிரியர்.டபிள்யு.ஜி.டி.தர்மரத்ன, விஞ்ஞான பீடம், றுகுண பல்கலைக்கழகம்

## ☞இலங்கை தராதர அங்கீகார சபை (SLAB)

- பேராசிரியர்.ரி.ஆர்.ஆரியத்ன, பௌதிகவியல் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர்.ஜே.சி.என்.ராஜேந்திரா, பௌதிகவியல் துறை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- பேராசிரியர்.எஸ்.எஸ்.கொலம்பாஹே, ஓய்வுபெற்ற பொருளாதார பேராசிரியர், இலங்கை மத்திய வங்கி
- பேராசிரியர்.லலீன். கருணாநாயக்க, இரசாயனவியல் துறை, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

# நிதி நிலைமை

**தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின்**
**2016 மார்கழி 31 இல் நிதி நிலைமை பற்றிய கூற்று**

**(அனைத்து நிதிப் பெறுமதிகளும் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)**

| | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசு,காசுக்கு சமனானவை | 1 | 672,270 | 323,797 |

| | | | |
|---|---|---|---|
| வர்த்தகம் மற்றும் பெறுகைகள் | 2 | 17,500 | 13,000 |
| பொருட்பட்டியல் /கையிருப்பு | 3 | 60,235 | 70,013 |
| முற்கொடுப்பனவு | 4 | 885,103 | 710,631 |
| உத்தியோகத்தர் கடன் - குறுகிய கால | 5 | 191,661 | 174,594 |
| | | **1,826,769** | **1,292,035** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | 6 | 3,988,674 | 7,157,721 |
| மீளச் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் | 7 | 1,275,500 | 1,275,500 |
| உத்தியோகத்தர் கடன் - நீண்டகால கால | 8 | 421,259 | 375,420 |
| | | **5,685,433** | **8,808,641** |
| **மொத்த சொத்துக்கள்** | | **7,512,202** | **10,100,676** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| நடைமுறையல்லா பொறுப்புகள் | 9 | 921,022 | 1,422,471 |
| நடைமுறையல்லாத செலவுகள் | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 10 | 2,894,974 | 6,946,934 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 11 | 2,430,916 | 2,263,734 |
| | | **5,325,890** | **9,210,668** |
| **மொத்த பொறுப்புகள்** | | **6,246,912** | **10,633,139** |
| **மொத்த தேறிய பொறுப்புகள்** | | **1,265,290** | **532, 463** |
| **தேறிய சொத்துக்கள்/ பங்குத்தொகுதிகள்** | | | |
| திரண்ட நிதியம் | | 2,831,946 | 2,899,822 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | | 2,589,250 | 1,629,300 |
| ஒதுக்குகள் | | (4,155,906) | (5,061,585) |
| **மொத்த தேறிய சொத்துக்கள் /பங்குத்தொகுதிகள்** | | **1,265,290** | **532,463** |

**தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின்
2016 மார்கழி 31 இல் நிதி நிலைமை பற்றிய கூற்று
(அனைத்து நிதிப் பெறுமதிகளும் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)**

| | குறிப்பு | **2015** | **2014** |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| மீண்டுவரும் அளிப்பு | | 19,795,000 | 21,213,100 |
| மூலதன அளிப்பு – S&T சேவை | | 2,135,900 | 4,688,500 |
| அரசாங்க அளிப்புகளின் கடன் தீர்ப்பனவு- தேய்மானம் | | 4,712,636 | 4,696,870 |
| வருமானம் | 12 | 563,900 | 290,613 |
| | | **27,207,436** | **30,889,083** |
| **செலவு** | | | |
| ஆளணியினர் வேதனங்கள் | 13 | 10,327,921 | 9,279,705 |
| பயணச் செலவுகள் | 14 | 79,142 | 550,541 |
| வழங்கல் மற்றும் நுகர்வுப்பொருள் பாவனைகள் | 15 | 406,549 | 410,077 |
| பராமரிப்பு | 16 | 561,694 | 753,456 |
| ஒப்பந்த சேவைகள் | 17 | 5,617,363 | 6,372,063 |
| மாற்றல்கள் | 18 | 2,994,398 | 2,972,991 |

| | | | |
|---|---|---|---|
| S&T சேவைகள் | 19 | 1,618,316 | 6,396,196 |
| தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்பு செலவுகள் | 6 | 4,712,636 | 4,696,870 |
| மொத்தச்செலவு | | **26,318,019** | **31,431,899** |
| தோழிற்பாட்டு செயற்பாடுகளிருந்தான குறை | | **889,417** | **542,816** |
| **நிதிச் செலவினம்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை விற்றுப்பெற்ற வருமானம் | | 16,260 | 820 |
| குற்ப்பிட்ட காலகட்டத்திற்கான தேறிய மிகை (பற்றாக்குறை) | | **905,677** | **541,996** |

## *கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை*

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஈசீ/ஏ/எஸ்ஏஎஸ்ரீஈசீ/1/15/23 ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2016 ஆகஸ்ட் 05

தலைவர்,
தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் VII ஆவது பகுதியின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று ஆணைக்குழுவின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
0411 2887028 34 0411 2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 அம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது உரிய சொத்து வகுப்புக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதி மாத்திரம் மீள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்த பெறுமதியில் வெளியிடும் போது மீள் மதிப்பீடு அமுலாகும் திகதி, சுயாதினமான மதிப்பீட்டாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டவரா எனவும், சொத்துக்களின் நியாயப் பெறுமதியில் மதிப்பீடு செய்யும் போது மதிப்பிடப்பட்ட முறைமை மற்றும் முக்கியமான எண்ணக்கருக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட எனினும், இன்னும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து நியாயப் பெறுமதியை கணக்குகளில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் ரூபா 15,445,186 கிரயமான சொத்துக்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் அதிகாரச்சட்டத்தின் 5(ஆ) பிரிவின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குத் தயாரிக்கப்பட்ட "அரசாங்க மற்றும் தனியார் பிரிவுகளின் முயற்சிகளினால் விஞ்ஞான, தொழில்நுட்ப பயன்பாடுகள் தொடர்பாக முன்னைய ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளின் மீளாய்வு அறிக்கை" அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக ஆணைக்குழுவின் செயற்பட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 889,417 மிகையைக் காண்பித்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 542,816 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,432,233 தொகையான அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 3,681,647 இனால் குறைவடைந்த போதிலும் செலவினம் ரூபா 5,113,880 இனால் குறைவடைந்தமையால் மேற்கூறப்பட்ட நிதிவிளைவின் முன்னேற்றத்திற்கு பங்களித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு முதல் கடந்த 04 வருடங்களின் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக இருந்த பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டின் போது

4

மிகையாக மாற்றமடைந்திருந்தது. ஊழியர் வேதனங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சீராக்கப்பட்டதன் பின்னர் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 7,460,849 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது 114 சதவீதத்தால் ரூபா 15,946,234 இற்கு அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தால் அதிகாரச்சட்டத்தின் 1 ஆவது பகுதியின் 5 ஆவது பிரிவின் பிரகாரம், விஞ்ஞான மற்றும் தொழில்நட்ப அபிவிருத்திக்கான கொள்கை மற்றும் திட்டமிடல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல், பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்தல், சுகாதார, போசனை மற்றும் வறுமையை நீக்குதல், கல்வி, பயிற்சியும் ஆராய்ச்சியும் தொடர்பாக தேவையான மனித மற்றும் ஏனைய வளங்களின் அபிவிருத்திக்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நிதியத்தை ஒதுக்குவதற்குரிய கொள்கை மற்றும் திட்டங்களைத் தயாரித்தல், இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் செயலாற்றலை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான அறிக்கையொன்றை வருடாந்தம் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தல் இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாட்டை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கூட்டுதல் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு மண்டபமொன்றை வழங்குதல் மற்றும் அது தொடர்பாக அமைச்சருக்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் என்பன ஆணைக்குழுவின் பணியாக இருந்தது.

மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை இனங்கண்டு மீளாய்வினை ஆரம்பிப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாட்டிற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,995,861 தொகை செலவில் 7 ஆவது இரண்டாண்டுகளிற்கு ஒரு முறையாக விஞ்ஞான மற்றம் தொழில்நுட்ப மாநாடு நடாத்தப்பட்டிருந்த போதிலும், அந்த மாநாட்டின் போது 10 துறைகளுக்குரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துவதற்கு இணக்கப்பாட்டிற்கு வந்திருந்த போதிலும், அந்த செயற்பாடற்றுக் காணப்பட்டன.

### 4.2 கொள்வனவு மற்றம் ஒப்பந்தச் செயற்பாடுகள்

2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலிற்கு முரணாக மீளாய்வாண்டிற்காக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 763,477 தொகையான பாதுகாப்பு சேவை எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமல் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 18 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 15 ஆகவும் இருந்தமையால் 03 பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள 02 விஞ்ஞானிகளின் பதவி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவி என்பற்றுக்காக தேவையான ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 03 கல்விக் குழுக்களின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 2 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அறிக்கை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவகத்தின் ஆரம்ப காலம் முதல் காணப்படுகின்ற விஞ்ஞான ரீதியிலான பதவியணியினரின் பற்றாக்குறையினால் இந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு

முடியாதிருந்ததாக ஆணைக்குழுவின் தலைவரினால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133(1) (அ) பிரமாணத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்ககாய்வு நடவடிக்கைகளைச் செய்வதற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டமொன்று 2015 செப்தெம்பர் 02 ஆந் திகதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரினால் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 21 விடயங்களில் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கொள்வனவு | முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமல் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை |

| | |
|---|---|
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | முறையான மதிப்பீடு தயாரிக்கப்படாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| (இ) பதவியணியினரின் நிர்வாகம் | விஞ்ஞான சேவைகளிலுள்ள பதவியணியின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |

ஒப்பம் :- எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

k/y

**தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (இ) வாசகத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**2.2 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துத் தெரிவித்தல்**

2.2.1 **இலங்கை அரச கணக்கீட்டு நியமங்கள்**

i. சொத்து, ஆதனம், பொறி இற்கான மீள்மதிப்பீட்டை செய்யும்போது அது சார்ந்த உடைமைகளின் வகைகள் எதிர்காலத்தில் மீள்மதிப்பீடு செய்யப்படும் என குறிக்கப்பட்டது.

ii. இந்த மீள்கணிப்பீடு 2015.12.15 ஆம் திகதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் கொழும்பு பெரும்பாக மாகாண விலைமதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்டதோடு இதைப் பற்றி கணக்குகளில் வெளிப்படுத்தல் விடுபட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் நிதிக் கூற்றுக்களில் சொத்து, ஆதனம், பொறி மீள்மதிப்பீட்டை வெளிப்படுத்துவதை உரியவாறு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

iii. இந்த விடயங்களை எதிர்வரும் ஆண்டுகளில் மீள்கணிப்பீடு செய்து கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

**2.3 சட்டங்கள் , ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை**

2013 மற்றும் 2014 இற்கான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

**.4தொழிற்பாட்டு மீளாய்வு**

**செயலாற்றுகை 4.1**

அ)) மீளாய்வுக்காக இனங்காணப்பட்ட அனைத்து நிறுவனங்களிலும் மீளாய்வு நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களில் அணுசக்தி அதிகாரசபை (AEA) மற்றும் இலங்கை தராதர சபை (SLAB) இரண்டாந் தடவையும் மீளாய்வு செய்யப்பட்டதோடு, அதன்போது, ஏனைய நிறுவனங்களின் இரண்டாவது மீளாய்வுச் சுற்றை ஆரம்பிப்பதற்கு போதியளவு காலம் கடக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. ஆதலால் கமத்தொழில் ஆரய்ச்சி நிறுவனத்தை மீளாய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய, 2015 ஆம் ஆண்டில் மீளாய்வுக்காக இனங்காணப்பட்ட கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. களப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (FCRDI)

2. பழப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (FRDI)

3. பூங்காப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (HORDI)

4. நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (RRDI)

5. தாவர மரபணு வள நிலையம் (PGRC ) 42

6. பின்னறுவடைத் தொழில்நுட்ப நிறுவனம் (IPHT)

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைப் பேரவையும் (SLCARP) கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களின் மீளாய்வை மேற்கொள்வதால் மீளாய்வு நடவடிக்கைகள் இரு தடவை (duplicate)

நடைபெறுவதை தடுப்பதற்காக அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு நேரிட்டது. தற்போது இந்த நிறுவனங்களை மீளாய்வு செய்வதற்காக கமத்தொழில் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

(ஆ) இந்தத் திட்டத்தைத் தயாரித்தல் நிறுவனத்தின் பொறுப்பாக இருந்த போதிலும், இதனை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பானது விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு முதற்கொண்ட ஏனைய அமைச்சுக்களுக்கே உரித்தாயுள்ளது. ஆயினும், இத்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று அதனை நடைமுறைப்படுத்துவதற்காக “தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வரைச்சட்டகம்” எனும் பெயரில் அதிமேதகு சனாதிபதி அவர்களிடம் 2016 மே மாதம் 03 ஆம் திகதி கையளிக்கப்பட்டது. ஆணைக்குழு 2015 ஆம் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்து செயற்பட்டிருப்பின் மேற்படி நடவடிக்கையை 2015 ஆம் ஆண்டினுள்ளேயே பூர்த்தி செய்ய இயலுமாயிருந்திருக்கும்.

**4.2. கொள்முதல் மற்றும் ஒப்பந்த செயற்பாடு**

பாதுகாப்பு சேவைகளிற்கான விலைகூறலிற்கு கோரப்படும் போது எழுத்துமூல ஒப்பந்தங்களை மேற்கொள்வதாக குறிக்கப்பட்டது.

**4.3. உத்தியயோகத்தர்களின் நிர்வாகம்**

இரு விஞ்ஞானிகளின் பதவிக்கான ஆட்சேர்ப்பிற்காக 20 மார்கழி 2015 இல் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது. கூடிய எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் பெறப்பட்டமையால் பொருத்தமான நபரை தெரிவு செய்யும் பொருட்டு அடிப்படை தகமையை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிற்கு எழுத்துப்பரீட்சை நடாத்தப்பட்டது. பரீட்சையின் மதிப்பீடு செயற்பாடு தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இரு விஞ்ஞானிகளின் ஆட்சேர்ப்பிற்கு பிறகு முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான ஆட்சேரப்பு செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

நிர்வாக உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு தற்போது நடாத்தப்படுகிறது. இதற்காக 28 மாசி 2016 இல் விண்ணப்பங்கள் கோரி பத்திரிகையில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.

**5. பொறுப்புடைமை மற்றும் நல்லாட்சி**

**5.2. பாதீட்டு ஆவணக் கட்டுப்பாடு**

20 ஆவணி 2014 இல் ஆணைக்குழு 2014 ஆணைக்குழு கூட்டத்தின் அனுமதியை பெற்றபிறகு பாதீட்டுத் திணைக்களத்திற்கு ரூபா 52.9 மில்லியன் ஐ நிறுவனத்தின் பாதீட்டு மதிப்பீடாக அனுப்பியிருந்த போதும் இத்திணைக்களம் ரூபா 50 மில்லியனாக திருத்தியமைக்கப்பட்டது இருந்தும் 2015 மாசி தொடக்கம் ஆடி 2015 வரை தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்துவர்கள் நியமிக்கப்படாத காரணத்தால் இது ரூபா 36.6 மில்லியனாக 16 புரட்டாதி 2015 இல் இடம்பெற்ற பிறகு 164[வது] ஆணைக்குழுக் கூட்டத்தில் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. 43

**நிறுவனத்தின் வரவு செலவுத்திட்ட மிதிப்பீட்டில் 40% சேமிக்கப்படுவதற்கான காரணம் பின்வருமாறு.**

**2015 ஆம் ஆண்டில் மீண்டுவரும் செலவினம் சேமிக்கப்படுவதற்கான காரணம்**

**வெளிநாட்டு பயணச் செலவு**

நிறுவனத்தின் நோக்கங்களுக்கு பொருந்துகின்றதான வெளிநாட்டுப் பயிற்சிகள்/ செயலமர்வுகள் கிடைக்காமையினால் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது.

**சம்பளம் மற்றும் வேதனம்**

ஆட்சேர்ப்பதற்கு உத்தேசமாயிருந்த புதிய 2 பதவிகளுக்கு பல்வேறு காரணங்களால் உரிய காலத்தில் ஆட்சேர்ப்பதற்கு இயலாதிருந்தமையால் மேற்படி நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது.

**காகிதாதிகள், எரிபொருள், பயணச் செலவு, ஆராய்ச்சி உதவி மற்றும் அச்சிடல் மற்றும் வெளியீட்டுச் செலவு**

2015 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஒருசில விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகள், ஆணைக்குழு நியமிக்கப்படாதிருந்தமை மற்றும் நிறுவனத்தின் தொழில்நுட்ப பணியாட்டொகுதியிலான பற்றாக்குறை காரணமாக மேற்கொள்வதற்கு இயலாதிருந்தமை காரணமாக காகிதாதிகள், எரிபொருள், பயணச் செலவு, ஆராய்ச்சி உதவி மற்றும் அச்சிடல் மற்றும் வெளியீட்டுச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன.

**2015 ஆம் ஆண்டில் மூலதனச் செலவு சேமிக்கப்பட்டமைக்கான காரணம்**

- ஆதன இயந்திரசாதன மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை செலவு செய்வதற்கான தேவை எழாமை.
- கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த வளிச் சீராக்கி இயந்திரங்கள் மற்றும் கனணி இயந்திரங்களின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் முடிவடைந்த போதிலும் அந்த இயந்திரங்களைத் தொடர்ந்தும் சிறந்த மட்டத்தில் பயன்படுத்துவதற்கு இயலுமாயிருந்தமையின் காரணமாக மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள் அந்தக் கொள்வனவுகள் நடைபெறாமை.
- உள்ளக தொலைபேசி முறைமையை மீளத்தாபிப்பதற்காக ரூபா ஒரு மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டது உயர் தரத்திலான முறைமையொன்றை கொள்வனவு செய்கின்ற நோக்கத்துடனாகும். எனினும், பெறுகைகளின்போது நிறுவனத்தின் விபரங்களுக்கு பொருந்துகின்ற அனைத்து வசதிகளுடனும் கூடிய முறைமையொன்றை குறைந்த செலவில் கொள்வனவு செய்வதற்கு இயலுமாயிருந்தமையால் அந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது.

**விஞ்ஞான தொழில்நுட்ப செயற்பாடுகள்**

2015 பெப்ருவரி தொடக்கம் யூலை மாதம் வரை நிறுவனத்திற்கு தலைவர் ஒருவர் மற்றும் ஆணைக்குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்படாதிருந்தமை மற்றும் விஞ்ஞான பணியாட்டொகுதியிலான பற்றாக்குறை காரணமாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளை திட்டமிட்டவாறு மேற்கொள்வதற்கு இயலாதிருந்தமையால் அந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. **44**

மேற்படி விடயங்கள் எமது கட்டுப்பாட்டுக்கு புறம்பான விடயங்களின் காரணமாக எழுந்தவையாகும் என்பதால் வரவு செலவுத்திட்டத்தின் கட்டுப்பாட்டுக் காரணி கீழ்ப்பட்டுள்ளது.

**6. முறைமை மற்றும் நிர்வாகத் துறைகள்**

மேற்படி மூன்று நிர்வாகத் துறைகள் தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

**கலாநிதி முதித லியனகெதர**
பணிப்பாளர்/பி.நி.அ.